கனம் திரு. வெ. ராமையா : அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. காரணம், இன்னும் வாட்ச்மென் க்வார்டர்ஸ், ரோடுகள் வேலை நடந்து கொண்டிருப்பதனால் முடிவான செலவுத் தொகை விவரம் வரவில்லை.

நியாயவிலைக் கடைகள்

* 378 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : } கனம்
திரு. கி. நாராயணசாமிப் பிள்ளை : }
உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ம் ஆண்டில் எத்தனை நியாய விலைக்கடைகளைத் திறக்க அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது ?

(இ) அனுமதி வழங்குவதில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) 700 shops. With the introduction of the Family Card System, the fair price shops ceased to exist.

(b) Does not arise.

திரு. வி. எஸ். எஸ். மணி : கிராமப் பகுதிகளில் வசிக்கும் நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள் கிடைப்பதில்லை. அந்த மாதிரியான பகுதிகளில் கட்டாயமாக நியாயவிலைக் கடைகளைத் திறக்க உத்தரவு அனுப்பப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : நியாயவிலைக் கடைகள் என்பது முன்பு 1960, 61, 62-இல் மத்திய அரசாங்கம் கொஞ்சம் அரிசி கொடுத்து, அதை அரிசி கிடைக்காத பகுதிகளில் விநியோகிக்க நியாயவிலைக் கடைகள் வைத்துக் கொடுத்தோம். இந்த வருஷம் நாமே கொள்முதல் செய்து விநியோகம் செய்வதனால்—நெசவாளர்கள் மட்டும் அல்ல—யாருக்காக இருந்தாலும் ஒரு பகுதியில் அரிசி கிடைக்கவில்லை என்றால் உடனே அதுபற்றி கலெக்டரிடம் தெரிவித்தால் அந்தப் பகுதிக்கு அரிசி சப்ளை செய்ய வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : வடாற்காடு மாவட்டத்தில் ரேஷன் கொண்டு வரவேண்டுமென்ற நிலைமை சென்ற மாதம் 21-ஆம் தேதியே ஏற்பட்டது. தேவையான அளவு அரிசி கிடைக்கக் கூடிய பகுதிகளில் ரேஷனைக் கொண்டுவரவேண்டிய அவசியம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : சென்னை, கோவை ஆகிய இரு இடங்களைத் தவிர வேறு எங்கும் ரேஷன் கொண்டுவரப்படவில்லை. மற்ற இடங்களில் கஷ்டம் இருந்தால் குடும்பக் கார்டு முறையில் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

9th November 1965]

திருமதி டி. என். அனந்தநாயகி : இதற்கு முன்னால் ரேஷன் கடையில் அரிசி கொடுக்கப்பட்டது. எண்ணெய், பருப்பு, சர்க்கரை போன்றவைகள் அந்த அந்தக் கடைகளில் கொடுக்கப்பட்டன. ரேஷன் கடையிலேயே இப்போது எண்ணெய், பருப்பு, சர்க்கரை போன்றவைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்வதால் இவர்கள் வியாபாரம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த வியாபாரிகளுக்கும் ரேஷன் கார்டுகளை பரவலாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. எஸ். முருகையன் : நியாயவிலைக் கடைகளுக்கு அனுமதி கொடுக்கும்போது பழைய வியாபாரிகள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : முன்பு சென்னைப் பட்டிணத்தில் வந்தது. அதைப் போக்கத்தான் ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு பத்து வருஷம், ஐந்து வருஷம் என்று கடை வைத்து, ஒழுங்காக சேல்ஸ் டாக்ஸ் கட்டி வந்திருக்கக் கூடிய எல்லா வியாபாரிகளுக்கும் பரவலாகக் கொடுக்க ஏற்பாடு செய்தோம். இப்போது புகார் இல்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் விறகு விலை அதிகமாக ஏறிக்கொண்டே இருப்பதனால், நியாய விலைக் கடைகளை விறகு சம்பந்தமாகவும் அதிகப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : எல்லாப் பொருள்களும் நியாய விலையில் மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பது தான் நம் ஆவல். அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்வோம்.

திரு. இராம. அரங்கண்ணல் : கடந்த பதினைந்து நாட்களாக விறகின் விலை ஏறிக் கொண்டே போகிறது. மண்ணெண்ணெய்யும் கிடைக்காத நிலையில் சிரமம் இருந்து கொண்டிருப்பதை நாம் அறிகிறோம். ஆகவே உடனடியாக புதிய நியாயவிலை விறகுக் கடைகளைத் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கம் அதுபற்றியும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : 700 நியாயவிலைக் கடைகளை—மாவட்ட வாரியாக—ஏற்படுத்த முன்வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நியாயவிலைக் கடைகள் என்பது பழைய சரித்திரம். இப்போது நாமே கொள்முதல் செய்து விநியோகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆகவே, மாவட்டத்திற்கு எவ்வளவு நியாயவிலைக் கடைகள் என்பது பிரச்சினை இல்லை.

[9th November 1965

திரு. டி. கார்ச்சா கவுடர் : சென்னை நகரத்தில் ஜனத்தொகை 20 லட்சம் என்று சொல்லப்பட்டது. குடும்பக் கார்டு திட்டம் வந்த பிறகு 40 லட்சமாக உயர்ந்திருக்கிறது என்பது உண்மையா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினருக்கு புள்ளி விவரம் சரியாகக் கிடைக்கவில்லை என்று நினைக்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : நியாயவிலைக் கடைகளில் புதிய மீன்களையும் நியாயமான விலைக்குக் கிடைக்க வழி செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நியாயவிலைக் கடைகளில் வைத்துத்தான் கொடுக்கவேண்டுமென்பதில்லை. நியாயமான விலைக்குக் கொடுக்க மீன் இலாகா நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

திரு. க. ர. நல்லசிவம் : கிராமப்புறங்களிலேயே நெல் விளைவிக்க கூடிய தொழிலாளர்களோடு நெசவாளர்கள் போன்றவர்களும் வசிக்கிறார்கள். இவர்களுக்கு நெல் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் அல்லாத தொழிலாளர்களுக்கு அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : எங்கெங்கே கஷ்டம் இருந்தாலும் அதை உடனடியாக அந்த அந்த ஜில்லா கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் குடும்பக் கார்டு முறையில் அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

MR. SPEAKER : I hope the House agrees to extend the time for Question Hour.

உணவு தானியங்கள் பதுக்கல் முதலிய குற்றங்கள்

* 379 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :
திரு. ஆ. கு. சுப்பையா :
} கனம் உணவு அமைச்சர்

தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தமிழக அரசாங்கம் நிர்ணயம் செய்த விலைக்கு மேல் அரிசியை விற்பனை செய்த காரணத்திற்காக இதுவரை பிடிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) One hundred and eighty-nine persons were arrested for selling rice at rates higher than the maximum prices fixed by the Government.

(*b*) Of these one hundred and eighty-nine persons one hundred and eighteen persons were convicted, thirty-six were acquitted and the case against one was dropped. Cases against three persons are pending trial in courts and cases against twenty-four persons are still under investigation. Action against seven persons was dropped.